Government of India

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம்–2017




சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு நாடு முழுவதும் 01–07–2017 முதல் அமலாக்கம் செய்யப்படவுள்ளது....

## வணிகவரித் துறை, தமிழ்நாடு

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பின் சிறப்பம்சங்கள்



ஒரே நாடு

ஒரே வரி

ஒரே சந்தை

**சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை நோக்கி முன்னேறிச் செல்வோம்**



# நடைமுறையில் இருக்கும் வரிகள்










- மத்திய வரிகள்
- மாநில வரிகள்
- மதிப்புக் கூட்டு வரி
- சுங்க வரி
- கலால் வரி
- ஆடம்பர வரி
- பந்தய வரி
- சேவை வரி
- மத்திய விற்பனை வரி
- நுழைவு வரி & நகர் நுழைவு வரி
- கேளிக்கை வரி

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

மத்திய விற்பனை வரி

கூடுதல் கலால் வரி

சேவை வரி

சிறப்பு கூடுதல் சுங்க தீர்வை

மத்திய கலால் வரி

நுழைவு வரி

ஈடு செய் வரி

கொள்முதல் வரி

மாநில மதிப்புக் கூட்டு வரி

சொகுசு வரி

கேளிக்கை வரி

ஜி.எஸ்.டி.




பல்வேறு வரிகளுக்கு மாற்றான வரி – ஜி.எஸ்.டி.

# GST-யின் அவசியம்






பல்முனை வரிகள்




வரிக்கு மேல் வரி




வரி ஏய்ப்பு



மாநிலங்களுக்கு இடையேயான வரி வித்தியாசம்



பல்வேறு படிவங்கள்




வெளிமாநில கொள்முதலுக்கு உள்ளீட்டு வரி வரவு இலலை

# GST-யின் பயன்கள்




1. ஒரே நாடு ஒரே வரி ஒரே சந்தை.
2. வெளிமாநில கொள்முதலுக்கு உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்ளலாம்.
3. வரிக்கு மேல் வரி இல்லை என்பதால் சரக்குகளின் விலை குறையும்.
4. தங்கு தடையற்ற சரக்கு போக்குவரத்து. ( No Checkpost)
5. வணிகர்களுக்கு இணைய, எளிய வழியிலான சேவை.

# GST- யின் பயன்கள்




6. நாடு முழுவதும் ஒருங்கிணைந்த பொருளாதார சூழ்நிலை உருவாகும்.
7. நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.
8. வெளிமாநில வர்த்தகத்திற்கு படிவங்கள் ஏதும் தேவையில்லை.
9. சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு செலுத்திய வரியை உள்ளீட்டு வரி வரவாக பயன்படுத்திக் கொள்ளலாம்.
10. சரக்கு மற்றும் சேவைகளுக்கு குறைந்த பரிவர்த்தனை செலவு.

# அரசியலமைப்பு 101–வது திருத்தச் சட்டம், 2016

- தற்பொழுது, மத்திய அரசு, சரக்குகளுககு உற்பத்தி முனை மற்றும் சேவைகளுக்கும் வரி விதிக்கின்றது..
- மாநில அரசுகள், சரக்குகளுக்கு விற்பனை முனையில் வரிவிதிக்கின்றன.
- மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு, ஒரே சமயத்தில் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்க அதிகாரம் வழங்கப்படுகின்றது.




## முக்கிய அம்சங்கள்

- இடைமாநில பரிவர்த்தனைகளுக்கு வரிவிதிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது
- GST மன்றம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் (GST Council)

## இதுவரை வழங்கப்பட்ட பரிந்துரைகள்




- CGST ,SGST, IGST உள்ளிட்ட ஐந்து வகை சட்டங்களுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- மேற்கண்ட சட்டங்களுக்கு உரிய விதிகளை பரிந்துரை செய்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவைகளுக்கு 3,5,12,18, 28 சதவீதங்களில் வரி நிர்ணயம் செய்துள்ளது.
- வரி விலக்கிற்கு உரிய சரக்குகள் மற்றும் சேவைகளை பரிந்துரை செய்துள்ளது.

# GSTN

GST சட்டத்தினை, எளிய மற்றும் வெளிப்படையான முறையில், நடைமுறைப்படுத்த வலைதள சேவையினை வழங்குகிறது.

- பதிவுச் சான்று விண்ணப்பித்தல்.
- நமூனாக்கள் தாக்கல் செய்தல்.
- வரி   செலுத்துதல்.
- திருப்புத் தொகை பெறுதல்.
- மேல்முறையீடு செய்தல்.
- தெளிவுரைகள் பெறுதல்







போன்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் இணைய வழிச் சேவை வழங்குகிறது.  வணிகர்கள், அலுவலர்களின் நேரடியான சந்திப்பிற்கு அவசியமின்றி சேவை பெறுவதற்கு வழிவகுக்கிறது.

# வரி விதிக்கும் அலுவலர்கள்



வணிகர்கள் மத்திய அரசிற்கோ அல்லது மாநில அரசிற்கோ ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்.







அந்த அலுவலரே அனைத்துவித வரிகளையும் விதிக்கும் அலுவலர் ஆவார்.

வணிகர்கள் மத்திய அல்லது மாநில அரசு அலுவலர்களிடம் தனித்தனியாக செல்ல வேண்டியதில்லை.




## GST சட்டத்தின்சிறப்பு அம்சங்கள்

- பதிவுச் சான்று
- வரி விகிதங்கள்
- உள்ளீட்டு வரி வரவு (ITC)




- பதிவுச் சான்று

# Migration of Dealers





தற்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்டங்களின்கீழ் பதிவு பெற்ற வணிகர்கள்  அனைவரும் 01.07.2017 அன்று GST சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள் (Migration).



GST  சட்டத்திற்கு இடம் பெயர்ந்த (Migrate )  வணிகர்களுககு தற்காலிக GSTIN  ID வழங்கப்படும்..

அவர்கள் 2017, ஜூலை 1–ம் தேதி முதல் GSTIN provisional ID எண்ணைக் கொண்டு விற்பனை தொடரலாம்.



01.07.2017 லிருந்து 3 மாதங்களுக்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தற்காலிக GSTIN ஐ நிரந்தர எண்ணாக மாற்றிக் கொள்ளலாம்.

தற்காலிக GSTIN  வழங்கப்பட்ட நபர்  GST சட்டத்தின்கீழ் பதிவு பெறத் தேவையில்லை என்றால் முறையாக விண்ணப்பித்து பதிவுச் சான்றினை இரத்து செய்து கொள்ளலாம்.

# புதிய பதிவுச் சான்று பெறுதல்



இணைய தளம் மூலம் GSTIN பதிவுச் சான்று வழங்கப்படும்.

முழுமையாக உள்ள பதிவு விண்ணப்பத்திற்கு பதிவுச் சான்று 3 நாட்களுக்குள் வழங்கப்படும்.

ரூ.20 லட்சத்திற்கு மேல் ஆண்டு மொத்த விற்பனை உள்ளவர்கள் GST–ன் கீழ் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.



ரூ.20 லட்சத்திற்கு கீழ் ஆண்டு மொத்த விற்பனை உள்ள நபர்களும் தானாக முன்வந்து பதிவு பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இவர்கள் மாதாந்திர நமூனா சமர்ப்பித்து வரி செலுத்த வேண்டும்.



பதிவுச் சான்று பெறுவதற்கு PAN கட்டாயம்

15 இலக்கம் கொண்ட GSTIN வழங்கப்படும்.

# புதிய பதிவுச் சான்று பெறுதல்



மாநில வாரியாக பதிவுச் சான்று பெற வேண்டும்.

United Nation Agencies, Multi Lateral Organization, Foreign Embassy, ஆகியவற்றிற்கு , Unique Identification Number வழங்கப்படும்.



பதிவுச் சான்று விண்ணப்பம் மத்திய அல்லது மாநில அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு GSTIN வழங்கப்படும்.




CGST, SGST மற்றும் IGST சட்டங்களுக்கு ஒரே விண்ணப்பம்.

சிறப்பு பொருளாதார மண்டலத்தில் நிறுவப்பட்ட வணிகங்களுக்கு தனி பதிவுச் சான்று பெறப்படவேண்டும்

# கட்டாய பதிவு செய்தல் (Compulsory Registration)




- கீழ்க்கண்ட நபர்களின் ஆணடு வணிகத்தொகை ரூ.20 லட்சத்திற்கு குறைவாக இருப்பினும் கட்டாயமாக பதிவுச் சான்று பெற வேண்டும்;

➢ இடைமாநில வழங்கல் மேற்கொள்பவர்.

➢ Reverse Charge அடிப்படையில் வரி செலுத்த வேண்டியவர்.

➢ தற்காலிக வரி (Casual Dealer) செலுத்தும் நபர்.

➢ வெளிநாடு வாழ் (Non-resident dealer)வரி செலுத்தும் நபர்.

➢ மின்னணு வணிகம் நடத்துபவர்.

➢ மின்னணு வணிகம் மூலம் வழங்கல் மேற்கொள்பவர்.

➢ உள்ளீட்டு சேவைகளை விநியோகிப்பவர்.

➢ TDS பிடித்தம் செய்ய வேண்டிய நபர்




- வரி விகிதங்கள்

# வரி விகிதங்கள்

| | |
|---|---|
| **3%** | தங்கம் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள். |
| **5%** | முந்திரி, காபி, டீ, வாசனைப் பொருட்கள். |
| **12%** | Dry Fruits, Butter & Ghee, Sewing Machine, Cell Phone. |
| **18%** | Ice Cream, Camera, Sugar, |
| **28%** | Chewing cum, molasses, pan-masala, Washing Machine. |










# GST சட்டத்திற்கு உட்படாத சரக்குகள்

**தற்காலிகமாக :**







- பெட்ரோலியம் கச்சா எண்ணெய்
- டீசல் (High Speed Diesel)
- பெட்ரோல் (Motor Spirit)
- விமான எரிபொருள் (ATF)
- இயற்கை எரிவாயு (Natural Gas)

**நிரந்தரமாக**

- மனித நுகர்வுக்கான மது வகைகள்.



# GST வரி எவ்வாறு வசூலிக்கப்படுகிறது




- சரக்குகள் மற்றும் சேவைகளின் ஒவ்வொரு வழங்கலின் நிலையிலும் GST விதிக்கப்படுகிறது.
- உள்மாநில வழங்கலுக்கு விதிக்கப்படும் GSTல் 50%CGST, 50% SGST அடங்கும்.

  எடுத்துக்காட்டு : GST விகிதம் 28% என்றால் CGST 14% மற்றும் SGST 14%
- வெளிமாநில வழங்கலுக்கு IGST மட்டுமே விதிக்கப்படும் ( 50% CGST, 50% SGST அடங்கும்.)

  எடுத்துக்காட்டு : IGST 28% என்றால் CGST 14% மற்றும் SGST 14%
- IGSTல் SGST Credit, சரக்கு மற்றும் சேவை பயன்படுத்தப்படும் மாநிலத்திற்கு மாற்றப்படும்.

# இணக்க வரி

ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 75 லட்சத்திற்கு கீழ் உள்ள வணிகர்கள் இணக்க வரி செலுத்தலாம்.



விற்பனைப் பட்டியல் விபரம் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

வணிகர்கள்
1%

உற்பத்தியாளர்கள்
2%

உணவகங்கள்
5%

# இணக்க வரி வரம்புக்குள் வர முடியாத நபர்கள்

**கீழ்க்கண்ட வணிகர்கள் இணக்க வரி செலுத்த இயலாது,**




- வெளிமாநில வணிகம் மேற்கொள்பவர்கள் .
- Reverse Charge அடிப்படையில் வரி செலுத்துபவர்கள்.
- உணவகங்கள் தவிர்த்து பிற சேவை வழங்குபவர்கள்.
- GST சட்டத்திற்கு உட்படாத சரக்குகளை வழங்குபவர்கள்.
- **மின்னணு வர்த்தகம் நடத்துபவர் மூலம் சரக்குகளை வழங்குபவர்**
- அரசால் அறிவிக்கப்படும் சரக்குகளை உற்பத்தி செய்பவர் .

# எளிய மாதாந்திர நமூனாக்கள்

தற்பொழுது வணிகர்கள் கொடுக்கும் **VAT**, **CST**, **ET** நமூனா ஆகியவைகளுக்கு பதிலாக.

**IGST**, **CGST**, **SGST** ஆகிய வரிகளுக்கு ஒரே மாதாந்திர நமூனா தாக்கல் செய்தால் போதும்.




**மாதாந்திர நமூனா சமர்ப்பிக்கும் முன்**

- விற்பனை விவரங்களை (GSTR-1) அடுத்த மாதம் 10ம் தேதிக்கு முன்பாக இணைய வழி மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- 15ம் தேதிக்குள் கொள்முதல் செய்த விவரங்கள் எல்லாம் **GSTR-2A** என்கிற படிவத்தில் தானாகவே தோன்றும்,

**GSTR-2** படிவத்தில் வரும் விவரங்களை சரிபார்த்த பின் 20ம் தேதிக்குள் வரி செலுத்தி நமூனாக்களை பதிவேற்றம் செய்யலாம்,

# மாதாந்திர நமூனாக்கள்




**B to B** விற்பனை செய்பவர்கள், பட்டியல் வாரியாக விற்பனை விவரங்கள் தரப்படவேண்டும் .

நுகர்வோருக்கு விற்பனை செய்பவர்கள், சில்லறை விற்பனை மொத்தத் தொகை பட்டியலினை தந்தால் போதும்.




இடைமாநிலங்களுக்கிடையே பதிவு பெறாத நபர்களுக்கு விற்பனை செய்பவர்கள் ரூ. 2.5 லட்சத்திற்கு மேல் பில்தொகை செய்தால், அதற்கான விவரங்களை மட்டும் தந்தால் போதும்.

# நமூனாக்கள் தாக்கல் செய்ய உரிய நாள்

1. வரி விகிதத்தின் அடிப்படையில் வரி செலுத்தும் நபர்;




| | |
|---|---|
| GSTR-1 (வெளி வழங்குகை விவரங்கள்) | அடுத்த மாதம் 1 முதல் 10ம் தேதிக்குள் |
| GSTR-2 (உள் வழங்குகை விவரங்கள்) | அடுத்த மாதம் 11 முதல் 15ம் தேதிக்குள் |
| GSTR-3 மாதாந்திர நமூனா) | அடுத்த மாதம் 20ம் தேதிக்குள் |

# நமூனாக்கள் தாக்கல் செய்ய உரிய நாள்

| | | | |
|---|---|---|---|
| இணக்க வரி செலுத்தும் நபர் | GSTR-4 | காலாண்டு நமூனா | காலாண்டிற்கு பின் வரும் பிரதி மாதத்தின் 18ம் தேதிக்குள். |
| தற்காலிக வணிகர், குடியிராத நபர் | GSTR-5 | மாதாந்திர நமூனா | 20ம் தேதிக்குள் |
| Input Service Distributor | GSTR-6 | மாதாந்திர நமூனா | 18ம் தேதிக்குள் |
| TDS, TCS நபர்கள் | GSTR-7,8 | மாதாந்திர நமூனா | 10ம் தேதிக்குள் |
| ஆண்டு நமூனா | GSTR-9 | அடுத்த நிதியாண்டின் டிசம்பர் 31ம் தேதிக்குள் | |
| இறுதி நமூனா | GSTR-10 | பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் | |

# 2017 ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாத நமூனாக்கள்




- 2017 ஜூன் மாத VAT நமூனாக்கள் மற்றும் வரித் தாக்கலை துறையின்TSP வலைத்தளத்தின் வழியாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

- வணிகர்களின் நலன் கருதி ஜூலை 2017 மற்றும் ஆகஸ்ட் 2017 மாத நமூனாக்களை புதிய வலைத்தளம் (GST) மூலம் தாக்கல் செய்ய கீழ்கண்டவாறு கால அவகாசம் தரப்பட்டுள்ளது.

| Return Month | GSTR-3B | GSTR-1 | GSTR-2 |
|---|---|---|---|
| July 2017 | 20th Aug. | 1st - 5th Sept. | 6th - 10th Sept. |
| August 2017 | 20th Sept. | 16th - 20th Sept. | 21st - 25th Sept. |

# வரி செலுத்துகை (Payment of Tax)



- வணிகர்கள் தங்களது வரியினை கீழ்க்கண்ட முறைகளில் செலுத்தலாம்

- **GSTN**- சேவையை பயன்படுத்தி **Online Payment / RTGS / NEFT / Credit / Debit Cards**, **Offline Payment** முறைகளிலும் வரித்தொகை செலுத்தலாம்.




- **Offline Payment (Challan)** முறையில் ஒரு மாதத்திற்கு ரூ.10,000 வரை நேரடியாக வங்கியில் செலுத்தலாம்.

# மின்னணு பேரேடுகள் (Ledgers)




## பணப் பேரேடு (Cash Ledger).

- வணிகர் செலுத்தும் பணமானது மின்னணு பணப்பேரேட்டில் தானாகவே வரவு வைக்கப்படும்.



## வரவுப் பேரேடு (Credit Ledger)

- நமூனாக்களின் மூலமாக கோரும் உள்ளீட்டு வரி வரவு மின்னணு வரவுப் பேரேட்டில் வரவு வைக்கப்படும்.
- உள்ளீட்டு வரி வரவு (ITC) தொகையை வரி செலுத்துவோருக்கு மட்டுமே சரி (Adjust) செய்து கொள்ளப்படும்.





## கேட்புப் பேரேடு (Liability Register)

- வணிகர் செலுத்த வேண்டிய வரிக் கேட்புகள் (Tax Demands) இதில் பதிவு செய்யப்படும்.




# உள்ளீட்டு வரி வரவு (ITC)

# ITC (Availment) துய்ப்பதற்கான முக்கிய அம்சங்கள்




CGST : Central GST
SGST: State GST
IGST: Interstate GST

- தற்பொழுது வணிகர்களால் செலுத்தப்பட்டுவரும் சேவை வரிகள் வணிக தொடர்புடைய பிற வரிகள் செலுத்துதலுக்கு ஈடு செய்ய இயலாது.
- ஆனால், சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தில் சேவைகள் தொடர்புடைய வரியினையும் வணிகர்கள் ஈடு செய்யலாம்.
- வணிகர்களால் செலுத்தப்பட்ட **IGST**, **CGST**, **SGST** வரியினை **ITC**ஆக எடுத்துக் கொள்ளலாம்,

# ITC துய்ப்பதற்கான முக்கிய அம்சங்கள் தொடர்ச்சி...




1) ITC துய்ப்பதற்கு, அந்த விற்பனையை மேறகொண்ட வணிகர் மாதாந்திர நமூனா சமர்ப்பித்து வரி செலுத்தியிருக்க வேணடும்.

2) அவர் விற்பனை விவரங்களை பட்டியல் வாரியாக மாதாந்திர நமூனாவை சமர்ப்பித்திருக்க வேண்டும்.

3) விற்பனை செய்தவர்(Supplier) மாதாந்திர நமூனாவை மேற்கூறியவாறு சமர்ப்பிக்கப்படாவிட்டால் பெறுபவருக்கு (Receipiant) ITC கிடைக்காது.

4) கொள்முதல் செய்தவர்கள் விற்பனை செய்தவருக்கு 180 நாட்களுக்குள் கொள்முதல் செய்ததற்கான முழுத் தொகையும் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாவிட்டால் கொள்முதல் செய்ததற்கு ITC திருப்புதல் செய்யப்படும்.

# ITC பெறுவதற்கான நிபந்தனைகள்








## வரி செலுத்தும் நபர்


- வரி விலைப்பட்டியலை (Tax invoice) வைத்திருக்க வேண்டும்,
- சரக்கு அல்லது சேவைகளை பெற்றிருக்க வேண்டும்,
- சரக்கு அல்லது சேவைக்கான வரி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்,
- முழுமையான, உரிய நமூனா தாக்கல் செய்திருக்க வேண்டும், .

# உள்ளீட்டு வரி வரவினை பயன்படுத்தும் முறை





| உள்ளீட்டு வரி | வெளியீட்டு வரி |
|---|---|
| CGST | CGST & IGST ✔ |
| SGST | SGST & IGST ✔ |
| IGST ✔ | IGST, CGST & SGST |
| SGST | CGST ✗ |

# Invoice Matching



- மாதாந்திர நமூனா சமர்ப்பிக்கப்பட்ட பின் மின்னணு முறையில் **Invoice Matching** செய்யப்படும்,
- வழங்குநர் மற்றும் பெறுநரின் விலைப்பட்டியல்கள் (GSTR-1 மற்றும் GSTR-2) பொருந்தினால் மட்டுமே பெறுநருக்கு உள்ளீட்டு வரி வரவு வழங்கப்படும்.
- வித்தியாசம் காணப்பட்டால் மின்னணு முறையில் இருவருக்கும் தெரிவிக்கப்படும்.
- தெரிவிக்கப்பட்ட வித்தியாசத்தினை வழங்குநர் தன்னுடைய நமூனாவில்இரண்டு மாதத்திற்குள் சரிசெய்யவில்லை என்றால், பெறுநருககு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு reverse செய்யப்படும்


# Invoice Matching தொடர்ச்சி.....




**எடுத்துக்காட்டு** –
அக்டோபர் 2017 மாத நமூனாவிற்கு விற்றவரின் **GSTR-1**, வாங்கியவரின் **GSTR-2**ம் பொருத்தி பார்த்தததில், விற்றவர் **Inv.10-15/10/2017** ரூ.1.00,000 என்ற விற்பனையைத் தெரிவிக்கவில்லையெனில்,

- இந்த வித்தியாசம் வாங்கியவருக்கும், விற்றவருக்கும் தெரிவிக்கப்படும், .
- விற்றவர் இந்த விடுபட்ட விற்பனையை இரண்டு மாதத்திற்குள் தன்னுடைய **GSTR-1**ல் சேர்த்து காண்பிக்க வேண்டும்.
- இல்லையென்றால் வாங்கியவருக்கு அனுமதிக்கப்பட்ட **ITC credit** திரும்பப் பெறப்படும்.

# Invoice Matching




2017-18 நிதியாண்டினைத் தொடர்ந்து வரும் செப்டம்பர் மாத நமூனா சமர்ப்பிக்க உரிய நாள் (செப்டம்பர் 2018)

அல்லது

ஆண்டு நமூனா சமர்ப்பிக்கப்பட்ட நாள் இவற்றுள் எது முன் நிகழ்ந்ததோ, அந்தத் தேதிக்கு முன், விற்றவர் வித்தியாசத்தை சரி செய்யலாம்.

அவ்வாறு வித்தியாசம் சரி செய்யப்பட்ட பின் வாங்கியவருக்கு திருப்பப்பட்ட வரி வரவு மீண்டும் வழங்கப்படும்.

# வரிவிதிப்பு செய்தல் (Assessment)



- வணிகர் செலுத்த வேண்டிய வரியை.
- ✓ தானாகவே நமூனாக்களில் தீர்மானிக்கலாம், (Self Assessment).
- ✓ வரிவிதிப்பு அல்லது வழங்கலின் மதிப்பு பற்றிய சந்தேகம் இருப்பின் அலுவலருக்கு விண்ணப்பித்து. தற்காலிகமாக தீர்மானித்துக் கொள்ளலாம். (Provisional Assessment).
- ✓ தற்காலிக வரிவிதிப்பு செய்யப்பட்ட இனங்களில் 6 மாதங்களுக்குள் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்,
- ✓ பதிவு பெறாத நபர்கள்;. நமூனா தாக்கல் செய்யாத நபர்களுக்கு சிறந்த தீர்ப்பின் அடிப்படையில் Best of Judgement, வரிவிதிப்பு செய்யப்படும்.
- ✓ அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என அலுவலர் கருதினால் அவ்வினங்களில் சுருக்க வரிவிதிப்பு செய்யப்படும். (Summary Assessment)

# தீர்ப்பாணைகள் (Adjudication)



- வரி செலுத்தாமல் குறைவாக செலுத்திய இனங்கள்
- திருப்புத் தொகை தவறுதலாக வழங்கப்பட்ட இனங்கள்
- உள்ளீட்டு வரி வரவு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட இனங்கள். இவற்றில்;. வரி ஏய்ப்பு நோக்கம் இல்லை என்றால்;. ஆண்டு நமூனா சமர்ப்பித்த 3 ஆண்டுகளுக்குள்ளும்.
- வரி ஏய்ப்பு உள்ள இனங்கள். ஆண்டு நமூனா சமர்ப்பித்த 5 ஆணடுகளுக்குள்ளும் Adjudication Order வழங்கப்படும்;/
- குறைந்தபட்சம் 3 அல்லது 6 மாதங்களுக்கு முன்
- (3 ஆண்டுகள் –5 ஆண்டுகள்) show cause Notice வழங்கப்பட வேண்டும்.

# வசூலித்த வரியை அரசுக் கணக்கில் செலுத்தாமல் இருந்தால்



- ஒரு வழங்கலுக்கு வரி செலுத்த வேண்டிய தேவை இல்லை எனில் அவ்வழங்கலுக்கு வரி வசூல் செய்யப்பட்டிருந்தால்;.

  அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

- அவ்வாறு செலுத்தப்படவில்லை எனில் Show Cause Notice கொடுத்து ஒரு ஆண்டிற்குள் இறுதி ஆணை பிறப்பிக்கப்படும்.

- அப்பொழுது வசூலித்த வரியினை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும்.

# தணிக்கை செய்தல்

பதிவு பெற்ற நபருக்கு தணிக்கைக்கு முன் உரிய முன்னறிவிப்பு வழங்கப்பட வேண்டும்.

வணிக இடத்திலோ அல்லது வணிக அலுவலகத்திலோ தணிக்கை மேற்கொள்ளலாம்.




வெளிப்படையான முறையில் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மூன்று மாதங்களுக்குள் தணிக்கை முடிக்க வேண்டும். தேவைப்பட்டால் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கலாம்.

தணிக்கையின் முடிவுகள் பதிவு பெற்ற நபருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

# சோதனை. கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல்




வணிக இடத்தினை சோதனை இடவும். சரக்குகள் மற்றும் ஆவணங்களை கைப்பற்றவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சரக்கு கைப்பற்றப்பட்ட 60 நாட்களுக்குள் Show cause Notice (SCN) கொடுக்காவிட்டால்;. சரக்கினை விடுவிக்க வேண்டும் (தேவைப்பட்டால் 6 மாதம் நீடிக்கலாம்)

# சோதனை. கைப்பற்றுதல் பறிமுதல் செய்தல்

குற்றத்தின் தீவிரத்திற்கு
ஏற்ப தண்டம்
விதிக்கப்படும்.

வரி ஏய்ப்பு நோக்கம் இல்லாமல்,
ஆவணங்களில் ஏதும் தவறு
செய்திருந்தால், அத்தவறு
திருத்தப்படக்கூடியதாக
இருந்தால், தண்டத் தொகை
இல்லை.




குற்றம் ஒப்புக்
கொள்ளப்பட்டால்
அலுவலர், தண்டத்
தொகையைக்
குறைக்கலாம்.

தண்டத் தொகை
விதிக்கப்படுவதற்கான
காரணங்களை விலக்கி
ஆணை பிறப்பிக்க
வேண்டும்.

# குற்றமும் தண்டனையும்

## வரி ஏய்ப்பு

ரூ. 1 முதல் 2 கோடி வரை. அல்லது தொடர் குற்றமாக இருந்தால், 1 ஆண்டு சிறை மற்றும் தண்டம்.

ரூ. 2 முதல் 5 கோடிக்குள்.
Non Cognizable and Bailable 3 ஆண்டு சிறை மற்றும் தண்டம்.

ரூ.5 கோடிக்கு மேல் -
Cognizable and non-bailable -
5 ஆண்டு சிறை மற்றும் தண்டம்.



# திருப்புத் தொகை வழங்குதல் (Refunds)




- GST வலைதளத்தின் வழியாக மட்டுமே திருப்புத் தொகை கோரி விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திருப்புத் தொகை வழங்கப்பட வேண்டும்..
- 60 நாட்களுக்கு மேற்பட்டால், உரிய வட்டியுடன் திருப்புத் தொகை வழங்க வேண்டும்.
- கேட்பு இல்லாமல் அதிகப்படியாக வரி செலுத்தப்பட்டிருந்தால்.ஆணை வழங்கப்பட்ட 2 ஆண்டுகளுக்குள் திருப்புத் தொகை கேட்டு விண்ணப்பிக்க வேணடும்.
- ஏற்றுமதிக்கு ஒப்புகை கொடுக்கப்பட்ட நாளிலிருநது 7 நாட்களுக்குள் ITC ல் 90% திருப்புத் தொகை தற்காலிகமாக வழங்கப்படும்

# ஏற்றுமதி மற்றும் இறக்குமதி




- ஏற்றுமதி:
- சரக்கு மற்றும் சேவைகள் ஏற்றுமதிக்கு வரி இல்லை, Zero rated supply ஆக கருதப்படும்.
- ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைகளுக்கு உள்ளீட்டு வரி வரவு திரும்ப வழங்கப்படும். (Refund of Input Tax credit).




- இறக்குமதி :
- சரக்கு மற்றும் சேவைகளின் இறக்குமதிக்கு IGST விதிக்கப்படும். (கலால் வரியுடன் சேர்த்து)
- இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட IGSTக்கு உள்ளீட்டு வரி வரவு உண்டு

# மேல்முறையீடு



- தீர்ப்பாணையை எதிர்த்து (Ajudication order).
- முதலாம் மேல்முறையீடு – மேல்முறையீட்டு அதிகாரி
- இரண்டாம் மேல்முறையீடு – மேல்முறையீட்டு தீர்ப்பாயம்
- ஓராண்டிற்குள் மேல்முறையீட்டு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் .
- மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் ஆணைக்கு எதிராக உயர்நீதிமன்றம் –மற்றும் உச்சநீதிமன்றத்தில் முறையிடலாம்.

# மேல்முறையீடு தொடர்ச்சி...,




- முதல் மேல்முறையீடு செய்ய – 10 % disputed Tax செலுத்த வேண்டும்.
- இரண்டாம் மேல்முறையீடு செய்ய – 20% disputed Tax செலுத்த வேண்டும்.
- மாநிலங்கள் மற்றும் மத்திய அரசிற்கு இடையில் உள்ள பிரச்சனைக்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஆணை வழங்கி இருந்தால், நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகலாம்.

# தெளிவுரைகள் பெறுதல் (Advance Ruling)




- Rate of Tax
- Method of Valuation
- Clarification
- ITC Admissibility தொடர்பாக தெளிவுரைகள் பெறலாம்.
- விண்ணப்பித்த 90 நாட்களுக்குள் தெளிவுரை வழங்கப்பட வேண்டும்.
- தெளிவுரை. விண்ணப்பதாரர் மற்றும் தொடர்புடைய வரிவிதிப்பு அலுவலர் ஆகியோருக்கு மட்டும் பொருந்தும்; .

# Transition Provisions: இடைநிலை ஏற்பாடுகள்

30/06/2017 அன்று மிகுதியாக உள்ள உள்ளீட்டு வரி வரவு மற்றும் இருப்பு சரக்குகளின் விவரங்களை 90 நாட்களுக்குள் உரிய படிவத்தில் **GSTN** வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.




மூலதனப் பொருட்களுக்கு முந்தைய சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படாமல் உள்ள உள்ளீட்டு வரியினையும் **GST** வரிக்கு ஈடு செய்யலாம்.

- உரிய ஆவணங்கள் இல்லாத வணிகர்கள் 30/06/2017 அனறு தங்கள் இருப்பில் உள்ள சரக்குகளின் விவரத்தை அதற்குரிய படிவத்தில் **GSTN** வலைத்தளத்தில் 90 நாட்களுக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- இருப்பில் உள்ள சரக்குகளை 6 மாதங்களுக்குள் விற்பனை செய்து ஒவ்வொரு மாதமும் உரிய வரியுடன் நமூனாக்கள் சமர்ப்பித்த பிறகு உள்ளீட்டு வரி வரவை பெறலாம்.

# Transition Provisions: இடைநிலை ஏற்பாடுகள் தொடர்ச்சி

GST வரிவிகிதம் 18% -க்கு மேல் உள்ள இருப்பு சரக்கினை உள்மாநிலத்தில் விற்றால், செலுத்திய வரியில் 60%–ம் வெளிமாநிலத்தில் விற்றால் 30%–ம் உள்ளீட்டு வரி வரவு பெறலாம்.




GST வரி விகிதம் 18%-க்கு கீழ் உள்ள இருப்பு சரக்கினை உள்மாநிலத்தில் விற்றால் செலுத்திய வரியில் 40%-ம் வெளிமாநிலத்தில் விற்றால் 20%-ம் உள்ட்டு வரி வரவு பெறலாம்.

இருப்பு சரக்குகள் எளிய வகையில் அடையாளம் காணும்படியாக இருப்பு வைத்திருக்க வேண்டும்.

# HSN Code

- GST வரிவிதிப்பு முறையில் HSN Code என்பது முக்கியமானது.

- ரூ. 1.5கோடி முதல் ரூ.5 கோடி வரை விற்பனை செய்பவர்கள் இரண்டிலக்க HSN Code தெரிவிக்க வேண்டும்.



- **ரூ. 1.5 கோடி** விற்பனை செய்பவர்கள் HSN Code தெரிவிக்க வேண்டியதில்லை.

- **ரூ.5 கோடிக்கு மேல்** விற்பனை செய்பவர்க்ள 4 இலக்க HSN Code தெரிவிக்க வேணடும்.

**HSN : Harmonized System of Nomenclature**

# வணிகர்களின் சேவையில்....

- கட்டணமற்ற தொலைபேசி சேவை : **1800-103-6751**

- **இணையதள சேவைகள் :**

  1. WWW.GST.GOV.IN
  2. WWW.GSTCOUNCIL.GOV.IN
  3. HTTPS://CTD.TN.GOV.IN
  4. WWW.CBEC.GOV.IN

- **மின்னஞ்சல் :**

  helpdesk@ctd.tn.gov.in




# நன்றி

## வணிகவரித் துறை, தமிழ்நாடு